## தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் - 2014

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பொதுத் திறைசேரியிடமிருந்து பூமி நடுக்கத்தை தவிர்க்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற மற்றும் மண்சரிவு இடங்களை வரைபடமாக்குதல் நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கிடைக்கப்பெற்ற நிதியத்திலிருந்து குறித்த செயற்பாடுகளுக்கு செலவிடப்படாமல் எஞ்சியிருந்த ரூபா 7,608,061 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சுனாமி மற்றும் வெள்ள அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் 06 மாதிரி வீடுகள் நிர்மாணிப்பதற்காக நலனாலிகளுக்கு உதவியளிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 4,188,200 தொகை, அவ்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் இச்செயற்திட்டத்தின் கீழ் வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 561,456 தொகை, செலுத்த வேண்டிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்த ரூபா 160,207,591 தொகையான மூலதன மானியங்களில் ரூபா 80,055,432 தொகை மண்சரிவு இடங்களை வரைபடப்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கிடைக்கப்பெற்றிருந்த மீண்டுவரும் மானியங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பண கொடுப்பனவுப் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 20,949,289 ஆன மீதியில் ரூபா 17,923,326 தொகையான ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

புவியியல் தொழில்நுட்ப பொறியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவின் கீழ் நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 132,182,194 தொகை தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கை, சான்றுறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,554,149 தொகை மற்றும் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மண் சரிவு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,411,229 ஆன தொகையொன்று 04 ஆண்டுகளாக நிலுவையாக காணப்பட்டன.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | வெவ்வேறு செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்கள் உரிய செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியிராத 32 சந்தப்பங்களின் போது பெற்றுக்கொண்ட ரூபா 1,130,523 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 01 மாதம் முதல் 5 ½ மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதமாகத் தீர்க்கப்பட்டிருந்தன.<br><br>மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களில் 10 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 101,850 தொகையான முற்பணத்திற்குரிய செயற்பாடு நிறைவேற்றப்படாமல் 01 மாதத்திற்கு 2 மாதத்திற்கும் இடைப்பட்ட காலம் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முற்பணமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு குறித்த செயற்பாடு நிறைவு பெற்றதன் பின்னரே மீண்டும் முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு முதலாவது முற்பணத்தை தீர்க்காமல் மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்த 12 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.<br><br>வழங்குனர்களுக்கு வழங்கப்படும் முற்பணத்தொகை கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் 20 சதவீதத்தை விட மேற்படக் கூடாத போதிலும், கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் 50 சதவீதத்தை விட கூடுதலாக முற்பணம் செலுத்தப்பட்டிருந்த 09 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவனத்திடமிருந்த கணனி மற்றும் கணனி துணைப் பாகங்கள், மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 62,748,371 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 11,227,959 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 51,520,412 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. நிறுவனத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 5,618,367 ஆல் அதிகரித்திருந்த போதிலும், வருமானம் ரூபா 53,482,172 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அனர்த்த இடரைக் குறைக்கும் பாதுகாப்பினை அடிப்படையாயக் கொண்ட சூழலுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தி தொழில்நுட்ப பங்களிப்பை வழங்குவது நிறுவனத்தின் பிரதான செயற்பணியானதுடன் நடைமுறையில் மண்சரிவு அபாயமுள்ள வலயத்தை வரைபடத்தில் குறித்தல், மண்சரிவு சேதங்களை குறைக்கும் செயற்திட்டத்தை மேற்கொள்ளல் மற்றும் மண் சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கல் என்பன நிறுவனத்தின் முதன்மையான செயற்பாடுகளாக இருந்தன. இது தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) மண்சரிவு ஆபத்துள்ள வலயத்தை வரைபடத்தில் குறிக்கும் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவனத்தால் மண்சரிவு அபாயங்களை இனங்காணல், எல்லைகளை நிர்ணயித்தல் மற்றும் இது தொடர்பான அனர்த்தங்களை இனங்காணுவதற்காக குருணாகல், கண்டி, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மீளாய்வாண்டினுள் 1:10,000 அளவுத்திட்டத்தின் கீழ் 2,277.5 சதுர கிலோ மீற்றர் வரைபடம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1,027 சதுர கிலோ மீற்றர் வரைபடம் தயாரித்து முடிக்கப்பட்டிருந்தது.

(ii) அவ்வாறே 1:50,000 அளவுத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் 1,387 சதுர கிலோமீற்றர் வரைபடம் தயாரிக்கும் நடவடிக்கை முன்னைய ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நடவடிக்கை மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக ஆண்டின் இறுதியிலான செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) மண் சரிவு இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கல்

நிறுவனத்தால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவலின் படி, மண்சரிவு அபாயத்துடன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டிட அபிவிருத்திச்

செயற்பாடுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கட்டிடம் நிர்மாணிக்கும் தரப்பினர்களால் மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கையொன்றை நேரடியாகவோ அல்லது உரிய உள்ளூராட்சி நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இச் செயற்பாட்டிற்காக நிறுவனத்தால் 10 மாவட்டங்களில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மண்சரிவு அபாய மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படுவது தொடர்பாக மண்சரிவு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் படி, இவ் அறிக்கை வழங்கப்படுவதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 25,729,474 தொகையான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசத்திற்கு அண்மித்த கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பாக உரிய சான்றுறுதியைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு தொடர்பாக மக்கள் அறிவூட்டுவதற்காக கிராம சேவகர்கள் பொது மக்களுடன் முறையான ஒருங்கிணைப்பைக் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக அனுமதியற்ற நிர்மாணங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டரீதியான அதிகாரமொன்று நிறுவகத்திற்கு கிடைத்திருக்கவில்லையென்பதால் அந்நடவடிக்கைகளுக்காக நேரடியாக ஈடுபடுவதற்கு முடியாதிருப்பதாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார்.

(ii) மீளாய்வாண்டில் உரிய சான்றிதழ்களை வழங்குவதற்காக பிரதேச சபைகளிலிருந்து ரூபா 25,729,474 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,548,058 தொகை நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தமையால் பிரதேச சபைகளிலிருந்து அறவிடப்பட்ட பணம் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கும் முறைமை முறையாகப் தொழிற்பட்டிராமை தெளிவாகின்றது.

(iii) மண்சரிவு அபாயத்துடன்கூடிய பிரதேசங்களில் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிடைக்கப்பெற்றிருந்த 38,070 விண்ணப்பங்களில் 35,237 விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அங்கீகாரம் வழங்காமல் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் தொடர்பாக பின் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு ஆக்கபூர்வமான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**(இ) மண்சரிவு அபாயத்தைக் குறைத்தல் தொடர்பான நடவடிக்கை**

(i) கொரடிஎல்ல மண்சரிவைக் குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் உரிய பிரதேசத்தின் மண்சரிவு தொடர்பான எச்சரிக்கையை பாரியளவில் எதிர்நோக்கிய 50 வீடுகள் அவ் ஆபத்திலிருந்து விடுபடுவது, சிறுபகுதிகள் உடைந்து வருவது வேறு பிரதேசத்திற்கு திருப்புவதற்காக மண்ணை நிரப்பி மதிலொன்றை நிர்மாணித்து பிரதான வீதிகள் சிலவற்றை மீள அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் 2012 முதல் 2016 வரையான காலப்பகுதியின் போது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 93,011,363 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 30,000,000 தொகையாக இருந்ததுடன், அந்நடவடிக்கைகள் தொடர்பான பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(ii) பெஷன்வத்த பிரதேசத்தின் பூமி நடுக்கத்தை குறைக்கும் செயற்திட்டம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 25,000,000 ஆக இருந்ததுடன், அதற்காக ரூபா 20,000,000 தொகை பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 6,676,086 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அப்பிரதேசத்தின் குடியிருப்பாளர்களின் எதிர்ப்புக் காரணமாக அதன் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்**

மீளாய்வாண்டிற்காக நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 19 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், இதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 12,000,000 நிதிஏற்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் பரிசோதனைப் பிரிவு, நில தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் பிரிவு மற்றும் சுற்றாடல் கல்வி மற்றும் சேவைப் பிரிவிற்கு 08 ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ரூபா 4,880,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பிரிவுகளினால் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மக்கள் குடியிருப்புத் திட்டம் மற்றும் பயிற்சிப் பிரிவிற்கு 07 பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,070,000 தொகையான ஏற்பாட்டை மிகைத்து ரூபா 6,460,062 செலவு செய்யப்பட்டிருந்தது.

(iii) அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குரிய திட்டத்தின் பிரகாரம் செயற்படாததன் காரணமாக அதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 12,000,000 ஆன நிதிஏற்பாட்டில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 2,700,280 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

**4.2 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்படுகின்ற 36 பதவிகளுக்குரிய ஆட்களை ஆட்சேர்ப்பதற்காக நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திட்டத்தின் பிரகாரம் விஞ்ஞானிகள் பதவிகளின் எண்ணிக்கை 58 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் 35 விஞ்ஞானிகள் நிரந்தர சேவையில் இணைக்கப்பட்டிருந்தனர். வெற்றிடங்களாக காணப்பட்ட 23 பதவிகளுக்காக ஒப்பந்த மற்றும் பணிப்பொறுப்பு அடிப்படையில் 31 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அதற்காக தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொண்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தை ஸ்தாபித்தல்**

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிடத் திணைக்களத்தின் மண் பரிசோதனை ஆய்வுகூடம் எனும் நிறுவனங்களுக்கு

ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வேறான ஓர் நிறுவனமாக 1993 செப்தெம்பர் 29 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் கீழ் முறையான அரச நிறுவனம் ஒன்றாக நிறுவனம் கூட்டமைக்கப்பட்டிராத காரணத்தால் ஆபத்தான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக்களுக்கு எதிராக நிறுவனத்திற்கு எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமை தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவனத்தின், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த பௌதீக செயற்பாட்டைக் கருத்திற்கொள்ளாது அது நிதி இலக்கை எய்திக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அனர்த்த வலயத்தை வரைபடத்தில் குறித்தல், மண்சரிவைக் குறைத்தலுக்காக மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பான பௌதீகச் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது.

அவ்வாறே செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வானிலை சாத்தியவள நிகழ்ச்சித்திட்டம் மற்றும் திரட்டிய மண்சரிவு குறைத்தல் செயற்திட்டத்தின் 1 ஆம் கட்டத்தினை மீளாய்வாண்டின் போது அமுல்படுத்த முடியாமல் போயிருந்தது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரைக் கொண்டிருந்ததுடன் நிறுவனத்தின் தலைமைப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கொடுப்பனவுகள் மற்றும் பௌதீகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முன்னேற்றம் தொடர்பான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கான நிதி இலக்கை தயாரிக்கும் போது இதற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டிராமையும் பாதிடப்பட்ட வருமானமும் செலவினமும் இலக்குகள் எய்தப்படுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை பாதிடப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான எண்ணிக்கைக்கும் இடையே நிலவிய பாரிய வேறுபாட்டின் போது தெளிவாகியது. இதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகள் எய்தப்படல்

நிறுவனத்தால் அனர்த்த அபாயத்தை குறைப்பதற்காக நாட்டின் மலைநாடுகளின் மண்சரிவுகள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இதனை ஒத்த இடர் கொண்ட பகுதிகளில் வரைபை வரைந்து அப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் தொடர்பான மண்சரிவு அனர்த்தம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல் போன்ற பாரிய பொறுப்புகள் ஏற்கப்படுகின்றன.

மண்சரிவு அனர்த்த வலயங்களை வரைவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மண்சரிவு அபாயகரமான பகுதிகளை இனங்கண்டு பல்வேறு நிறுவனங்களின் மூலம் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கொள்கை வகுத்தல், அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், மண்சரிவு அபாயங்களை முன்னரே அறிவித்தல், மண்சரிவு அபாயத்துடன் கூடிய பிரதேசங்களில் கட்டிடங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) பதவியணி நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு